# VRS என்னதான் கணக்கு?

பெரும்பான்மையாகவுள்ள மூன்றாம்- நான்காம் பிரிவு ஊழியர்களை குறைப்பது தான் VRS திட்டத்தின் முக்கிய நோக்கம். கவர்ச்சிகரமான கண்க்கீடுகள் என்பதெல்லாம் மாயை.

ஆகஸ்ட் 22, 2011 அடிப்படையில் மொத்த ஊழியர்களில் A-2.7%, B-17.12%, C- 65.28%, D- 13.96% என்றுள்ளனர். ஏறத்தாழ 80 % ஆக இருக்கின்ற ஊழியர்களை சரிபாதியாக குறைப்பது என்பதுதான் திட்டத்தின் பின்னணி. பிட்ரோடா தெரிவித்த 'மூன்றில் ஒரு பங்கு' என்பதையெல்லாம் BSNL விஞ்சி விட்டது.

வெளிப்பார்வையில் 99700 ஊழியருக்கு VRS- 36 % ஊழியருக்கு VRS என்று முன்வரைவு செய்யப்பட்டுள்ளதாக கணக்கீடு வரும். ஆனால் 99700 ஊழியரில் C மற்றும் D ஊழியர் 91869 என்பதும் B மற்றும் A 7745 மட்டும் தான் என்று அறிய வேண்டும். அதாவது மொத்த VRS எண்ணிக்கையில் 92 % C மற்றும் D ஊழியரைக் குறிவைத்தே திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 8% தான் B மற்றும் A அதிகாரிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. மிக ஆர்வமாகயிருந்த அதிகாரிகள் சிலர் இதனால் ஏமாறலாம். Non-Executive ஊழியர்கள் 'மாலையிடப்பட்ட பலிஆடுகளாக' மாற்றப்படவுள்ளனர் என்பதை ஊழியர்கள் அறிய வேண்டும்.

45 வயதினருக்கு மேல் தான் VRS என்றும் சொல்லப்படுகிறது. 45 வயதிற்குமேல் 215613 ஊழியர் உள்ளனர். இதன்படி பார்த்தால் 46% ஊழியர்கள் VRS நோக்கி தள்ளப்படவுள்ளனர். 45 வயதிற்கும் மேல் உள்ள GrC ஊழியரில் 50 % ஊழியர்களுக்கும், GrD ல் 53 % ஊழியருக்கும் VRS திட்டமிடப்பட்டுள்ளது. Gr A ல் 23 %, Gr Bல் 23% திட்டமிடப்பட்டுள்ளது. VRS Ex-gratia என்கிற ஈடு கவர்ச்சிகரமாக காட்டப்பட்டுள்ளது. மிகப்பெரிய வரப்பிரசாதம்- வாராது வந்த மாமணி போல் சித்தரிக்கப்படுகிறது. எளிய மாதிரிக் கணக்கு ஒன்றை மட்டும் நாமும் போடலாம். குஜராத் கணக்கு தான் தருவர் என்பதால் அதைப் பார்ப்போம்.
ரூ 20000 அடிப்படை சம்பளமும் 50% DA வும் உள்ள 30 வருட சேவை முடித்த ஊழியரொருவரின் கணக்கை பார்க்கலாம்.

Basic- 20000
DA 10000
Salary 30000 ஒரு நாள் ஊதியம்= 30000/30=1000

(முதலில் 26 நாட்களுக்கு ரூ 30000 என்று எடுத்துக் கொண்டு ஒரு நாள் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இதை மற்றி விட்டனர்)

30 வருட சேவைக்கு- 35 நாட்கள்—35*30*1000= 10,50,000
மீதி 5 வருட சேவையிருப்பதாக கணக்கிட்டால்
5 வருட சேவைக்கு- 25 நாட்கள்- 5*25*1000= 1,25,000
= 11,75,000

அதாவது அவருக்கு 11.75 லட்சம் கிடைக்கும். செலவே செய்யாமல் அதை அப்படியே வங்கியில் போட்டு 10 % வட்டி பெற்றால் மாதம் 10,000 கிடைக்கும் என்கிறது நிர்வாகம். அந்த வட்டியையும் அப்படியே சேர்த்தால் 60 மாதங்களுக்கு 6 லட்சம் என்றால் 5 வருடத்திற்குப் பிறகு 11.75 + 6 =17.75 லட்சம் கிடைக்கலாம்.

ஆனால் அவ்வூழியர் VRSல் செல்லாமல் வேலையில் நீடித்தால் பெறப்போகும் ஊதியம் 5 வருடத்தில் 21 லட்சம். என்வே 5 வருடம் கழித்து கணக்குப் பார்த்தால் VRSல் செல்வதால் 5 லட்சம் நஷ்டம் தான் வருகிறது.

ஊதியம்- Ex-gratia கணக்கு மட்டுமல்ல. ஓய்வூதியம் கூட முன்கூட்டியே செல்வதால் ரூ 2000 மாதந்தோறும் அவருக்குக் குறையும். எனவே ஓய்வூதியம், கிராஜூடி, கம்யூடேஷனில் அவருக்கு 3 லட்சம் நட்டமாகும்.

5 வருடம் சேவை பாக்கியுள்ள ஒருவருக்கு முன் கூட்டியே VRSல் செல்வதால் 8 லட்சம் அளவில் நட்டம் தான் வருகிறது. 5 வருடம் வேலை பார்க்கவேண்டும் என்ற ஒரே ஒரு பிரச்சினை தான் அவருக்கு. உண்மையில் வேலையிலிருப்பது என்பது ஓய்வில் இருப்பது என்பதை விட கூடுதல் கௌரவமே.

18-9-11